## இலங்கை நியமங்கள் நிறுவகம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை நியமங்கள் நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிறுவகத்தின் கணக்கு வைக்கும் போது வருமானத்திற்காக காசு அடிப்படையும் செலவினங்களுக்காக அட்டுறு அடிப்படையும் பின்பற்றப்பட்டிருந்தன.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 322,320 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட 04 குளிரூட்டி இயந்திரங்களின் பெறுமதி அலுவலக உபகரணங்கள் கணக்கில் கணக்கு வைக்கப்பட்டிராமையினால் அப் பெறுமதியினால் அலுவலக உபகரணங்களின் கணக்கு குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பௌதீக இருப்புப் பரிசோதனையின் போது ரூபா 343,902 பெறுமதியான காலங்கடந்த இரசாயன இருப்பும் ரூபா 494,893 தொகையான அசைவுறாத மற்றும் ரூபா 407,467 தொகையான மெதுவாக அசையும் நுகர்வுப் பொருள் இருப்புக்கள் என்பவைகளுக்காக கணக்குகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வியாபாரக் கடன்பட்டோர் மீதி ரூபா 6,065,416 ஆக இருந்ததுடன் முறையான காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டிராமையினால் இப்பணத்தை நிறுவகத்தினால் அறவீடு செய்யும் இயலுமையைத் தீர்மானிக்க முடியாதிருந்தது. மேலும் 56 கணக்குகளின் கடன்பட்டோர் மீதிகள் சேர்ந்திருந்ததுடன் எந்த நிறுவகத்தினதும் மீதிகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 11 கணக்குகளில் சேர்ந்திருந்த வியாபரக் கடன்கொடுத்தோர் மீதி தொடர்பாக 03 நிறுவகங்களின் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் அந் நிறுவனங்களினதும் கடன்கொடுத்தோர் மீதிகள் இணங்கியிருக்கவில்லை. அதன் பிரகாரம் கடன்கொடுத்தோர் நிலைமை தொடர்பாக திருப்தியடைய முடியாதிருந்தது.

(இ) 23 நானாவித கணக்குகளின் ரூபா 3,966,497 தொகையான மீதி மிகவும் நீண்ட காலத்திலிருந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் மீதி முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிராகக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று |
| --- | --- | --- |
| தளபாடமும் உபகரணங்களும் | 10,775,698 | ஒவ்வொரு சொத்தினதும் வருட இறுதியில் உள்ளவாறான மீதியினைக் காட்டும் பட்டோலை, பொருள் மெய்மையாய்வு அறிக்கை என்பன. |
| அலுவலக உபகரணம் | 59,700,842 | |
| ஆய்வுகூட உபகரணம் | 551,469,995 | |
| ஆய்வுகூட தளபாடங்கள் | 3,942,687 | |
| நூல் நிலைய புத்தகங்கள் | 15,049,540 | |

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1984 இன் 6 ஆம் இலக்க இலங்கை நியமங்கள் நிறுவக அதிகாரச் சட்டம் | (i) அதிகாரச் சட்டத்தின் 19(1) அல்லது 23 ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களை மீறும் அல்லது அதன் பிரகாரம் செயற்படுதலை தவிர்க்கும் தரப்பினர் இவ் அதிகாரச் சட்டத்தின் கீழ் தவறிழைத்தமையும் 46(1) இன் பிரகாரம் அவ்வாறான தவறிழைத்தவருக்காக சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு உட்டுபடுத்துதல் மற்றும் அதற்காக தண்டனை வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீறல்களைச் செய்ததற்காக நிறுவகம் தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. |
| | (ii) அதிகாரச் சட்டத்தின் 3(ஏ) பிரிவின் பிரகாரம் கல்வி, விரிவுரைகள் மற்றும் ஏனைய மூலங்களிலிருந்து நியமப்படுத்துதல் மற்றும் தரக் கட்டுப்பாடு என்பன மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் ஆய்வுகூடச் சேவை பிரிவுச் செயற்பாடுகளை முன்னேற்றுவதற்காக ஆண்டின் போது 3 பயிற்சி பாடநெறிகள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 10(5) ஆம் | தேறிய மேலதிக வருமானத்தில் சேமிக்கப்பட்ட சகல தொகைகளும் ஒன்றிணைந்த |

| | | |
|---|---|---|
| | பிரிவு | நிதியத்தில் வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கடந்த 5 வருடங்களில் உழைக்கப்பட்ட இலாபம் ஒன்றிணைந்த நிதியத்திற்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

| ஆண்டு | உழைக்கப்பட்ட இலாபம் |
|---|---|
| 2007 | 779,313 |
| 2008 | 11,580,578 |
| 2009 | 49,915,902 |
| 2010 | 95,956,902 |
| 2011 | 101,032,277 |

| | | |
|---|---|---|
| (இ) | 1979 இன் 01 ஆம் இலக்க நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரச்சட்டம் | எஸ்எல்எஸ் சான்றிதழ் இலச்சனை கட்டாயப்படுத்தப்பட்ட 39 உள்நாட்டு உற்பத்தி நிறுவனங்கள் எஸ்எல்எஸ் சான்றிதழ் செல்லுபடிக்காலம் கடந்திருந்த போதிலும் பதிவினை மீளப் புதுப்பிப்பதற்கு பல்வேறு காரணங்களினால் பிற்போடப்பட்டிருந்தது. |
| (ஈ) | 1997 பெப்ரவரி 03 ஆந் திகதி 8/97 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை | மேலதிக நேரக் கொடுப்பனவு மாதமொன்றிற்கு 20 மணித்தியால உச்ச எல்லையாக இருக்க வேண்டியதுடன் விஷேட காரணங்களின் அடிப்படையில் உச்ச எல்லையினை விஞ்சுமாயின் அதற்காக திணைக்களத் தலைவரின் சிபார்சுடன் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான அங்கீகாரமின்றி நியமங்கள் நிறுவகத்தின் சாரதிகள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு மேற்கூறப்பட்ட எல்லையினை விஞ்சி மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தன. |
| (உ) | 2006 யூலை மாதம் 14 ஆந் திகதிய 2006/11 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை | உத்தியோகபூர்வ வாகனங்கள் உரித்துள்ள உத்தியோகத்தர்களுக்கு நியமிக்கப்பட்ட சாரதிகளுக்கு உரித்தான மேலதிக நேரம் 100 |

மணித்தியாலமாக இருந்ததுடன் அத்தொகை அதிகரிக்கின்ற சந்தர்ப்பங்களில் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை.

(ஊ) 2006 யூலை 01 ஆந் திகதிய 144/28 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி

(i) கூட்டான வியாபாரப் பெயர்களின் கீழ் ஜீஜ குழாய் நிறுவனம் செய்திருந்த 45 சந்தர்ப்பங்களின் தெரிவில் 41 இலங்கை நியமங்களுக்கு இணங்காதிருந்ததுடன் மேலும் 4 சந்தர்ப்பங்களில் இறக்குமதிப் பொருட்களை விடுவிப்பதற்கு அனுமதி வழங்காதிருந்த போதிலும் 2010 திசெம்பர் 04 ஆந் திகதி தொடக்கம் 03 வருடங்களுக்கு பதிவு புதுப்பிக்கப்பட்டிருந்தது. கடைசி எல்லையினைக் கருத்திற் கொண்டு பொருட்கள் விடுவிக்கப்பட்டிருந்தமையினால் பயன்படுத்துவோருக்கு தாக்கம் இல்லாதிருந்ததாக தலைவர் அறிவித்திருந்தார்.

(ii) இலங்கை நியமங்கள் 829:2009 உடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள்

| **ஆண்டு** | **இறக்குமதியாளரின் எண்ணிக்கை** | **இறக்குமதி செய்யப்பட்ட அளவு (கி.கிராம்)** | **மாதிரிகளின் எண்ணிக்கை** | **வெற்றியடையாத சந்தர்ப்பங்கள்** |
|---|---|---|---|---|
| 2011 | 12 | 3,621,375 | 13 | 06 |
| ஜீரீஎல் | - | 265,455 | 05 | 03 |

(எ) இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் ஜீஎல்/சீபீ/02 ஆம் இலக்க ஏற்றுக்கொள்ளப்பட்ட பத்திரம்

வருடாந்தக் கட்டணத்தில் காலாண்டிற்கு தீர்மானிக்கப்பட்ட தொகை அக்காலாண்டின் இறுதிவரையில் ஆரம்ப வாடிக்கையாளரினால் செலுத்தப்படாத சந்தர்ப்பத்தின் போது தாமதக் கட்டணமாக 10% தண்டமொன்று அறவிடப்பட

| | |
|---|---|
| | வேண்டிய போதிலும் தண்டம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அப்படிவங்களின் பிரகாரம் வருடாந்த கட்டணம் அறவீடு செய்தல் உரிய நிறுவனத்தின் வருடாந்த விற்பனைப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ் விற்பனைப் பெறுமதி சரியான முறையில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

(ஏ) நிதிப் பிரமாணங்கள்

-----------------------------------------------------------

| | |
|---|---|
| நி.பி 757(2) மற்றும் நி.பி 102 | பௌதீக இருப்பு மெய்மையாய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைவுகள் மற்றும் இழப்புக்குள்ளான பொருட்கள் தொடர்பாக செயற்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டில் ரூபா 252,762,374 தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஐ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை

-----------------------------------------------------------

| | |
|---|---|
| (i) VIII ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பந்தி | வார இறுதி மற்றும் அரசாங்க விடுமுறை தினங்களில் சேவையாற்றுவதற்காக 1/20 கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்காக நாளொன்றுக்கு 8 மணித்தியாலங்களுக்குக் குறையாத காலம் சேவையாற்ற வேண்டியிருந்த போதிலும் அத் தேவைப்பாட்டிற்கு முரணான வகையில் நியமங்கள் நிறுவகத்தின் உத்தியோகத்தர்களுக்கு 8 மணித்தியாலங்களுக்குக் குறைவான காலம் சேவையாற்றியமைக்காகவும் முழுமையான கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ii) XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பந்தி | 1992 ஆம் ஆண்டிலிருந்து சேவையை விட்டுச் சென்ற 14 உத்தியோகத்தர்களிடமிருந்து இடர் கடனாக ரூபா 243,790 தொகை அறவிட வேண்டியிருந்த போதிலும் தற்போது சேவையிலிருக்கின்ற பிணையாளர்களிடமிருந் தேனும் உரிய பணத்தை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) 2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய கொள்வனவு வழிகாட்டி | |
| (i) 2.4.1 (அ) | கொள்வனவு நடைமுறைகளுக்காக கொள்வனவுக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு என்பவைகள் மொத்தக் கொள்வனவுச் செயற்பாடுகளையும் அமுல்படுத்த வேண்டியிருந்த போதிலும் வாகனங்களை வாடகைக்குப் பெறுவதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 9.3.1(ஆ) | ரூபா 100,000 இற்கு மேற்பட்ட பழுதுபார்த்தலுக்காக வரிசை அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் கே.ஐ-4238 ஆம் இலக்க வாகனத்திற்கான ரூபா 1,069,156 தொகையான பழுதுபார்த்தல் செலவினத்திற்காக அவ்வாறான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

**வரவினை அடிப்படையாகக் கொண்டு படி செலுத்துதல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 8.3.3 ஆம் பந்தி மற்றும் 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க அரசாங்க முகாமைத்துவ சுற்றுநிருபங்கள் என்பவைகளுக்கு முரணாக பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் பதவியணியினரில் ஒருவருக்கு ரூபா 8,000 படி வரவினை அடிப்படையாகக் கொண்டு ஊக்குவிப்புக்

கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது திறைசேரி அங்கீகாரமின்றி ரூபா 2,842,600 தொகையானது வரவினை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

**2.1** சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 101,032,277 மிகையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான அதனோடொத்த மிகை ரூபா 95,956,902 ஆக இருந்தது. இவ் அதிகரிப்பிற்கு ஏனைய வருமானம் ரூபா 47 மில்லியனினால் அதிகரித்தமை, ஆளணி சம்பளச் செலவினம் ரூபா 25 மில்லியனினால் உயர்வடைந்தமை போன்றன காரணமாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பௌதீக செயலாற்றல்

2011 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் உள்ளவாறான செயலாற்றல்களின் பரிசோதனைகளின் போது கீழே குறிப்பிடப்படுகின்ற எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ள முடியாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | விடயம் | இலக்கு | உள்ளபடியான செயலாற்றல் |
|---|---|---|---|
| (i) | நியமங்கள் நிறுவகக் கட்டிடம் | ரூபா 30,000,000 செலவிடப்பட்டு நியமங்கள் நிறுவகத்தின் 8 ஆவது மாடி நிர்மாணித்தல் | 08 ஆவது மாடி நிர்மாணித்தல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை |
| (ii) | விஞ்ஞான மற்றும் பொறியியல் நியமங்கள் | 08 நியமங்கள் முன்னேற்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | நியமங்கள் முன்னேற்ற நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டிருக்க வில்லை. |
| (iii) | ஆய்வுகூட சேவை | வர்ணங்கள், பாதணிகள், நறுமணம் மற்றும் தேயிலை போன்ற புதிய பகுதிகளுக்கான 18 பரிசோதனை மாதிரிகளைப் பரிசோதித்தல் | புதிய பரிசோதனை மாதிரிகளைப் பரிசோதித்தல் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (iv) | அளவையிடல் சேவை | புதிய நிறையளித்தல் அளவையிடல் சேவைகளை வழங்குதல் | சேவை வழங்கப்பட்டிருக்கவில்லை |
| (v) | விற்பனை மற்றும் மேம்படுத்தல் | பாடசாலை மாணவர்களுக்கு 10 கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தல் | 05 கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்திரம் ஒழுங்கமைக்கப் பட்டிருந்தது. |
| (vi) | உற்பத்தி உறுதிப்படுத்துதல் | • தேயிலை உற்பத்திக்காக நியமங்கள் உறுதிப்படுத்துதல் உத்தேசத் திட்டமொன்றை அறிமுகப்படுத்துதல் | தேயிலை உற்பத்திக்காக நியமங்கள் உறுதிப்படுத்துதல் உத்தேசத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு ரூபா 1,500,000 தொகையொன்று பாதீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் இந்த உத்தேசத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை . |
| | | • தேயிலை உற்பத்திக்காக 28 புதிய நியம உறுதிப்படுத்தல்களை வழங்குதல் | தேயிலைக்காக 10 புதிய நியமங்கள் உறுதிப்படுத்தல்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. |
| | | • அரிசி மற்றும் உரங்களுக்காக நியமங்கள் உறுதிப்படுத்தல் உத்தேசத் திட்டமொன்றை அறிமுகப்படுத் துதல். | அரிசி மற்றும் உரங்களுக்காக நியமங்கள் உறுதிப்படுத்தல் உத்தேசத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை . |
| (vii) | தரத்தினை உறுதிப்படுத்துதல் | இறக்குமதி பரிசோதனை உத்தேசத் திட்டத்திற்காக 30 புதிய விடயங்களை ஒன்று சேர்த்தல் | 10 புதிய விடயங்கள் மாத்திரம் ஒன்று சேர்க்கப்பட்டிருந்தது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

பின்வரும் முகாமைத்துவ செயற்திறமையீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 ஆம் ஆண்டிற்காக நடாத்தப்பட்ட பொருள் மெய்மையாய்வின் போது 380 நூலகப் புத்தகங்களின் குறைவொன்று அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஆ) ஆய்வுகூடப் பிரிவினால் விநியோகிக்கப்படுகின்ற பரிசோதனை அறிக்கைகள் விநியோகிக்கின்ற போது கவனத்திற் கொள்ளக்கூடிய தாமதமொன்று ஏற்பட்டிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது.

## 3.3 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

நிறுவகத்திற்குச் சொந்தமான கீழே குறிப்பிடப்படுகின்ற வாகனங்கள் நீண்ட காலமாக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக 2004 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 353(5) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்று நிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இல. 57 – 6208 கப் வாகனம்

இல. 15 – 3216 வகன் கார்

இல. 32 – 2870 வான்

## 3.4 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிறுவகத்தின் வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(அ) தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நியமங்கள் நிறுவகத்திற்கு நியமிக்கப்பட்டிருப்பதாக காண்பிக்கப்பட்டு முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர் ஒருவருக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 244,521 தொகையொன்று மீளளிப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான உத்தியோகத்தர் நியமங்கள் நிறுவகத்தில் சேவையில் இல்லாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) தேசிய பயிலுனர் மற்றும் தொழில் நுட்ப பயிற்சி அதிகாரசபையினால் பயிற்சிக்காக நியமங்கள் நிறுவகத்திற்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு பயிற்சி உத்தியோகத்தர் தொழில் நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சிற்கு நியமிக்கப்பட்டு அவ் உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் போது

சம்பளம் மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் என்பன செலுத்தப்பட்டிருந்தன.

(இ) நிறுவகத்திற்குச் சொந்தமான 57-6208 ஆம் இலக்க கெப் வாகனம் தொழில் நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் செயற்பாடற்றதன் பின்னர் மீள கையளிக்கப்பட்டிருந்தது. இந்த வாகனத்தின் பழுதுபார்த்தல் செலவினமாக ரூபா 228,098 தொகையை நியமங்கள் நிறுவகம் செலவிடப்பட்டிருந்தது.

**3.5 பதவியணியினர் நிருவகம்**

---

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 07 மேல் தர பதவிநிலை பதவிகளின் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் சில பதவிகள் 2004 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாக இருந்தன.

**3.6 வாகனப் பயன்பாடு**

---

நிறுவகத்திற்குச் சொந்தமான 19 வாகனங்கள் இருந்த போதும் 3 சாரதி பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டமையினால் 5 வாடகை வாகனங்களின் சேவையும், அதற்கு மேலதிகமாக கப் வாகனத்தின் சேவையும் பெறப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது வாடகை வாகனம் பெற்றுச் கொள்வதற்காக செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 4,921,124 ஆக இருந்தது.

**3.7 தாமதமான செயற்திட்டங்கள்**

---

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளில் ஊக்குவிப்புக்களைப் பெறும் செயற்திட்டம்

(i) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுக்கு தர உறுதிப்படுத்தல்களை வழங்குவதற்காக ரூபா 30,329,577 தொகையான நிதி ஏற்பாட்டில் இரண்டு கட்டங்களில் அமுல்படுத்தப்பட்ட மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 10,040,897 ஆகும். அதாவது மொத்த நிதி ஏற்பாட்டில் 33% ஆக இருந்ததுடன் ஏனைய செலவினங்களுக்காக 53% உம் செலவிடப்பட்டிருந்தன.

(ii) 2010 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த செயற்திட்டம் 2011 ஆம் ஆண்டின் போதும் பூர்த்தியடைந்திருக்கவில்லை. இச் செயற்திட்டத்தை முன்கொண்டு செல்வதற்காக திறைசேரியின் அங்கீகாரம் கிடைத்திருக்காததுடன் எஞ்சிய தொகையான ரூபா 4,079,759 நடைமுறைக் கணக்கில் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(iii) நியமங்கள் நிறுவகம் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுடனான உடன்படிக்கையின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் தரச் சான்றிதழ் வழங்கப்படாதிருப்பின் பெறப்பட்ட பணம் மீள நிறுவகத்திற்குச் செலுத்த வேண்டியிருந்த போதிலும் I மற்றும் II ஆம் கட்டங்களில் வழங்கப்பட்ட ரூபா 1,354,475 தொகைக்காக தரச் சான்றிதழ் வழங்குவதற்கோ அல்லது பணத்தை மீளச் செலுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) இந்த உதவித் திட்டத்தின் கீழ் சான்றிதழ் பெற்றிருந்த 02 நிறுவனங்கள் வருடாந்த கட்டணம் செலுத்துவதிலிருந்து தவிர்ந்திருந்தனர்.

(v) 5 நிறுவனங்கள் வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தியமைக்கான எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பும் நல் ஆளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

நிறுவகத்தின் வருமானம் தொடர்பான பாதீடு செய்யப்பட்ட பெறுமதி மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் என்பவற்றை இணக்கஞ் செய்த போது 21% தொடக்கம் 466% வரையான முரண்கள் காணப்பட்டமையினால் கூட்டிணைந்த திட்டம் / செயல்நடவடிக்கைத் திட்டங்களுக்கு நேரொத்ததாக பாதீடு தயாரிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பொருள் மெய்மையாய்வு

(ஆ) நிலையான சொத்துப் பதிவேட்டினைப் பேணுதல்.

(இ) கடன்பட்டோர் கட்டுப்பாடு

(ஈ) இறக்குமதிப் பரிசோதனை

(உ) பரிசோதனை அறிக்கை விநியோகித்தல்

(ஊ) தேசிய தர விருது விழாக்களை நடாத்துதல்